விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 315 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 13 வியாழக்கிழமை (30.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்ப்பாணம் பலாலியில் மக்கள் காணி விடுவிப்பு

### பாதுகாப்பு அமைச்சில் கலந்துரையாடல்



(கொழும்பு)

யாழ்ப்பாணம் பலாலியில் இராணுவ வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சில் உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

நாடு முழுவதும்

## போதை ஒழிப்பு செயற்றிட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதும் போதைப்பொருளை ஒழிக்கும் செயற்றிட்டத்தின் 15ஆம் பக்கம் பார்க்க

வட்டுக்கோட்டையில்

## கிணற்றிலிருந்து சடலம் கண்டெடுப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள ஆலயக் கிணறொன்றிலிருந்து முதியவர் ஒருவர் சடல 15ஆம் பக்கம் பார்க்க

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும்

## அரச, தனியார் பேருந்துகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பேருந்துகளின் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று ஆராயப்பட்டது.

அரச மற்றும் தனியார் பேருந்து சேவையின் எதிர்காலத் திட்ட முன்மொழிவு குறித்தும் அதன் சவால்களை ஆராயும் முகமாகவும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் ஆகியோரது 16ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாணக் கல்வியின் அபிவிருத்தி தொடர்பில்

### துறைசார் வல்லுநர்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பாக துறை சார் நிபுணத்துவம் உள்ளவர்களுடனான கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமான சொன்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குறித்த 15ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறையில் குண்டு மீட்கப்பட்ட சம்பவம்

### இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட மூவர் கட்டுநாயக்கவில் கைது

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த மூன்று சந்தேகநபர்களையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## கூட்டாட்சி முறைமை தொடர்பில் தமிழ்த் தரப்புகளுடன் பேசத் தயார்



ஆளுந்தரப்பு தெரிவித்ததாக சுவிஸ் தூதுவர் சுமந்திரனிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கூட்டாட்சி முறைமையை (பெடரல்) அறிமுகப்படுத்துவது குறித்து தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக அண்மையில் சுவிஸர்லாந்தில் ஒழுங்கு செய்யப் 16ஆம் பக்கம் பார்க்க

கீரிமலை நல்லிணக்கபுரத்தில்

## மூக்கால், வாயால் இரத்தம் வந்த 3 மாதக் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நல்லிணக்கபுரத்தில் மூக்கால், வாயால் இரத்தம் வந்த மூன்று மாதக் குழந்தை ஒன்று நேற்று மரணமடைந்துள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த அரியதாஸ் கஜிஷ்ணவி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை 23.07.2025 அன்று பிறந் 15ஆம் பக்கம் பார்க்க

போதைப்பொருளுடன்

## யாழ்.நகரில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் போதைப்பொருட்களுடன் நான்கு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர் 15ஆம் பக்கம் பார்க்க

முன்னாள் ஜனாதிபதி

## ரணிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ்மா அதிபர் பிரியந்தவை பாராளுமன்றுக்கு அழையுங்கள்

## எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடுவதற்காக பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவை பாராளுமன்றத்திற்கு அழைக்குமாறு எதிர்க்கட்சி, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க பொலிஸ்மா அதிபருடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு எதிர்க்கட்சி, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்ததாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், சபாநாயகர் தற்போது வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளதால், குறித்த கடிதம் சபாநாயகர் அலுவலகம் ஊடாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கயந்த கருணாதிலக்க மேலும் தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஒரு திகதியை வழங்கும் என்று தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

# கோயிலுக்குள் வழிபடச் சென்ற இளைஞன் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கோயிலுக்குள் வழிபடச் சென்ற இளைஞன் மீது தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி விநாயகபுர கிராமத்தில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நேற்று மாலை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கோயிலுக்கு வழிபடச் சென்ற 19 வயது இளைஞன் மீது சில பெண்களும் ஆண்களும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,316)

## யாழ்ப்பாணம்...

பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) தலைமையில் நேற்று முன்தினம் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வு), அத்துடன் சிரேஷ்ட பாதுகாப்பு மற்றும் நிர்வாக அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

மக்களின் சொத்துக்களில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் அதேவேளை, அத்தியாவசிய பாதுகாப்புத் தளங்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் புதிய எல்லைகளைத் திட்டமிடுவது குறித்து இறுதி செய்யப்பட்டன.

காணிகளை விடுவிக்கும் பணியை துரிதப்படுத்த இராணுவத்தின் கட்டம் கட்டமான பின்வாங்கல் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், பாதுகாப்புச் செயலாளரும் தேசிய நல்லிணக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாக காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர்.

தேசிய பாதுகாப்புக் கருத்தாய்வுகளுடன் முழுமையாக ஒத்துப்போகும் வகையில், இந்தச் செயல்முறை வெளிப்படையாகவும், சமத்துவமாகவும் பேணப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ம-7)

## ரணிலுக்கு...


கொழும்புக் கோட்டை நீதவான் இசுரு நெத்திகுமார முன்னிலையில் இந்த வழக்கு நேற்று (29) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பான விசாரணையை விரைவுபடுத்தவும் மேலும் எவரேனும் சந்தேகநபர்கள் இருப்பின் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் நீதவான் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவுக்காக தனிப்பட்ட பயணமாக லண்டனுக்குச் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஒன்றரைக் கோடி ரூபாய்க்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியதாகக் கூறி, அவருக்கு எதிராகக் கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மரண அறிவித்தல்



மலர்வு 27.12.1947

உதிர்வு 29.10.2025

## அப்பாக்குட்டி செல்வநாயகம்

### (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

சரசாலை வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து (Leiden)ஐ இடைக்கால வதிவிடமாகவும் சுன்னாகம் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி செல்வநாயகம் அவர்கள் நேற்று 29.10.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - மகிழம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகசபை, செல்வராசா, காலஞ்சென்ற செல்வரத்தினம், சிவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவனேஸ்வரி, சிவப்பிரகாசம்(கனடா), தியாகலிங்கம், மகேந்திரலிங்கம்(கனடா), காலஞ்சென்ற திருமணி, காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, காலஞ்சென்ற பத்மநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தினேஷ்குமார்(ஹொலண்ட்), பத்மறூபா(லண்டன்), பத்மறாஜி(லண்டன்), கிருஷ்ணறூபா(லண்டன்), விஸ்ணுறாஜ் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷாந்தி, சபேஷ்குமார், கபிலன், அமிர்தறாஜ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நித்தீஷ், சேயோன், றுஷானா, றொஜிஷ், கஜீஷா, அக்ஷா, கிராஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2025) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(5774)

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

| | |
|---|---|
| யோகேஸ்வரி(மனைவி) | : 021 224 3682 |
| தினேஷ் (மகன்) | : +31640829014 |
| றூபா (மகள்) | : +447388888333 |
| றாஜி (மகள்) | : +447463448544 (0774549660) |
| கிருஷ்ணா (மகள்) | : +447438218676 |
| விஷ்ணு (மகன்) | : +31610803392 |

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனமான எதிர்க்கட்சியே இன்று நாட்டில் உள்ளது!

## பிரித்தானியாவில் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு



(லண்டன்) ..............................

**நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்தி போதைப் பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது எதிர்க்கட்சியினர் குறுகிய அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

பிரித்தானியாவுக்கு சென்றுள்ள அமைச்சர்களான நளிந்த ஜயதிஸ்ஸ, சரோஜா சாவித்ரி போல்ராஜ் மற்றும் ஹர்ஷண நாணயக்கார ஆகியோர் லண்டன் நகரில் தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நிறைவடைந்த ஒரு வருட காலத்தில் பொருளாதார மீட்சிக்குரிய திட்டங்களை சகல அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக செயற்படுத்தியுள்ளோம்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதுடன் நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாகும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அப்போது தான் சட்டத்தை மதிக்கும் சிறந்த சமூகம் ஒன்று தோற்றம் பெறும்.

இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது எதிர்க்கட்சியினர் அதற்கு தடையாக செயற்படுகிறார்கள். பாதுகாப்பு சார்ந்த விடயங்களை பலவீனப்படுத்தும் வகையில் கருத்துக்களை தெரிவிக்கிறார்கள். பலவீனமான எதிர்க்கட்சியே இன்று உள்ளது.

பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்க போவதில்லை என தெரிவித்தார். (நி)

# ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணயமாற்று வீதத்தின்படி,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 300.45 ரூபாய் 25 சதம், விற்பனை பெறுமதி 307 ரூபாய் 94 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 397 ரூபாய் 22 சதம், விற்பனை பெறுமதி 409 ரூபாய் 53 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 348 ரூபாய் 46 சதம், விற்பனை பெறுமதி 359 ரூபாய் 89 சதம் என்பதாகும். (நி)

# வீதிகள் தோறும் பாதுகாப்பு கமராக்கள்

### அரசாங்கம் தீவிர கவனம்

(கொழும்பு)

கொழும்பு உட்பட நாடு முழுவதும் உள்ள பல்வேறு பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளிலும் வீதிகளிலும் பாதுகாப்பு கமரா அமைப்புகளை நிறுவுவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்குத் தேவையான கமராக்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கான செலவு குறித்து கலந்துரையாடப்பட்டு வருவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாதாள உலக குற்றவாளிகள் உட்பட பல்வேறு சந்தேக நபர்களைப் பிடிக்க பாதுகாப்பு கமராக்கள் பெருமளவில் உதவியுள்ளன. மேலும் இந்த கமரா அமைப்பு பல சந்தேக நபர்களைப் பிடிப்பதை இலகுவாக்கியுள்ளதாக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மாகாண மட்டத்தில் இந்த பாதுகாப்பு கமரா அமைப்பை செயற்படுத்துவது மற்றும் மேற்கு, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை செயற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நாடு முழுவதும் இந்த கமரா அமைப்பை செயற்படுத்துவதே இதன் நோக்கமாகும். (நி)

# யானைக்கால் நோயாளர்களுக்கு இரவில் இரத்தப் பரிசோதனை

### சுகாதார அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

யானைக்கால் நோய் பரிசோதனைகளுக்காக இரவு நேரங்களில் வீடுகளுக்கு வரும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆதரவளிக்குமாறு, மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யானைக்கால் நோய் ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர் பிரசங்க சேரசிங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

யானைக்கால் நோயைப் பொறுத்தவரை, ஒரு நோயாளி அறிகுறிகளுடன் வரும்போது, அவருக்கு நோய் ஏற்பட்டு 10, 15 அல்லது 20 வருடங்கள் கடந்துவிடுகின்றன.

வீதிகளில் காணும் கால்கள் வீங்கிய அல்லது விசேட உறுப்புகளில் வீக்கங்களுடன் இருக்கும் ஒரு நோயாளி, காலம் கடந்தே அடையாளம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரவு நேரங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் மேற்கொள்ளப்படும் விசேட இரத்தப் பரிசோதனைகள் மூலமே இந்த நோயாளிகள் அடையாளம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இஷாரா செவ்வந்திக்கு உதவிய பெண் சட்டத்தரணி கைது!

(கொழும்பு)

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு உதவியதற்காக கடவத்தையைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஷாரா செவ்வந்திக்கு போலி சட்ட அடையாள அட்டையை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது. (நி)

# சிறையிலுள்ள இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலையில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாகப் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் 36 சிறைச்சாலைகள் உள்ளன.

அவற்றில் அடைக்கக் கூடிய சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 10,500 ஆகும்.

ஆனால் தற்போது கிட்டத்தட்ட 36,000 பேர் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)

# இந்த ஆண்டில் இதுவரை 27 பேருக்கு மலேரியா தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மலேரியா நோய்த்தொற்று மீண்டும் பரவக்கூடும் என்ற அச்சத்தைச் சுகாதார அதிகாரிகள் வெளியிட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளிடையே மலேரியா நோய்த்தொற்று அதிகரித்த வகையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் இதுவரை 27 பேர் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.


அவர்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளிலிருந்தபோது தொற்றுக்குள்ளான இலங்கையர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதனைக் கருத்திற்கொண்டு வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் அனைவரையும் மலேரியா பரிசோதனைக்குட்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது இரண்டு டெங்கு வைரஸ் வகைகள் அதிகமாகக் காணப்படுகின்றன என்றும், நுளம்பு இனப்பெருக்க இடங்களை ஒழிக்கப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவது மிக முக்கியம் என்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 'இன்னார் செய்தாரை ஒறுத்தல்...'



அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் கிளட்ச் செஸ் சம்பியன்ஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இது உலகின் நான்கு சிறந்த வீரர்கள் பங்கேற்கும் ஒரு குறுகிய விரைவு சதுரங்கப் போட்டியாகும். இதில் இந்தியாவைச் சேர்ந்த குகேஷ், உலகின் நம்பர் 1 வீரர் மேக்னஸ் கார்ல்சன், ஹிகாரு நகமுரா மற்றும் பேபியானோ கருவானா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த குகேஷ் முதல் போட்டியில் கார்ல்சனுடன் தோல்வியடைந்து மோசமான தொடக்கத்தை கொடுத்தார். இதனையடுத்து நகமுரா மற்றும் கருவானாவுக்கு எதிராக தொடர்ச்சியாக இரண்டு வெற்றிகளுடன் அவர் வலுவாக மீண்டு வந்தார்.

குறிப்பாக சில நாட்களுக்கு முன்பு குகேஷ் இற்கு எதிராக வெற்றி பெற்ற பிறகு அவரது 'ராஜா' காயை எடுத்து ரசிகர்கள் திசையில் நகமுரா தூக்கி எறிந்தார். இதை பார்த்த குகேஷ், சிரிப்புடன் அதனை கடந்து சென்றார். இந்தச் சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனையடுத்து தற்போது நகமுராவுக்கு எதிராக குகேஷ் வெற்றி பெற்ற பிறகு ஹிகாருவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அவர் நடந்துகொண்டதைப் போன்று அநாகரிகமாக நடந்துகொள்ளாமல், சதுரங்க காய்களை அடுக்க ஆரம்பித்து விட்டார்.

பலரும் இதனை எதிர்பார்க்காததால், அரங்கத்தில் இருந்தவர்கள் கோஷங்களை எழுப்பி குகேஷ்க்கு வாழ்த்து தெரிவித்தனர். இதனால் சமூக வலைத்தளங்களில் குகேஷின் செயலுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. (3)

## முதலாவது ரி-20 தொடர்

# பாகிஸ்தானை வீழ்த்தி தென்னாபிரிக்கா அபாரம்

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் ரி-20 போட்டியில் தென் ஆபிரிக்கா 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ராவல்பிண்டியில் நடந்த ரி-20 போட்டியில் பாகிஸ்தான் மற்றும் தென் ஆபிரிக்கா அணிகள் மோதின.

முதலில் ஆடிய தென் ஆபிரிக்கா அணி 9 விக்கெட்டுக்கு 194 ஓட்டங்கள் குவித்தது. ரீஸா ஹென்ரிக்ஸ் 40 பந்துகளில் 60 ஓட்டங்கள் விளாசினார்.

டோனி டி ஸோர்சி 16 பந்துகளில் 33 ஓட்டங்களும், ஜார்ஜ் லிண்டே 22 பந்துகளில் 36 ஓட்டங்களும் விளாசினர். மொஹம்மது நவாஸ் 3 விக்கெட்டுகளும், சைம் அயூப் 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.




பின்னர் 195 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி லிண்டே, போஷ், லிஸாத்தின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 18.1 ஓவர்களில் 139 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக சைம் அயூப் 37 ஓட்டங்களும், மொஹம்மது நவாஸ் 36 ஓட்டங்களும் எடுத்தனர். கார்பின் போஷ் 4 விக்கெட்டுகளும், ஜார்ஜ் லிண்டே 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனால் தென் ஆபிரிக்கா 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் தென்னாபிரிக்கா அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. 2 ஆவது போட்டி லாகூரில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. (3)

## பங்களாதேஷை வீழ்த்தி ரி-20 தொடரை வெற்றியுடன் தொடங்கிய மே.இ.தீவுகள்



பங்களாதேஷ் - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை பங்களாதேஷ் 2-1 எனக் கைப்பற்றியது. இந்த நிலையில் 3 போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடர் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நாணய சுழற்சியில் மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. ஷாய் ஹோப் ஆட்டமிழக்காமல் 28 பந்தில் 46 ஓட்டங்களும், ரோவ்மன் பொவேல் 28 பந்தில் 44 ஓட்டங்களும் எடுக்க மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 165 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 165 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் துடுப்பாட்டம் செய்தது. முதல் மூன்று வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த தவ்ஹித் ஹிரிடோய் 28 ஓட்டங்கள் எடுத்தார். தன்சிம் ஹசன் ஷகிப் 33 ஓட்டங்களும், நசும் அகமது 20 ஓட்டங்களும் எடுத்த போதிலும் பங்களாதேஷ் அணி 19.4 ஓவரில் 149 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. இதனால் 16 ஓட்டங் கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது. மேற்கிந்திய தீவுகள் அணியில் ஜெய்டன் சீல்ஸ், ஜேசன் ஹோல்டர் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் 1-0 என பங்களாதேஷ் முன்னிலையில் உள்ளது. (3)

# வியன்னா ஓபன் டென்னிஸ்; சம்பியன் வென்றார் சின்னர்

வியன்னா பகிரங்க டென்னிஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் இத்தாலியின் ஜானிக் சின்னர், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வரேவ் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினார்கள்.

இதில் சின்னர் 3-6 என முதல் செட்டை இழந்தார். அலெக்ஸாண்டர் ஸ்வரெவ் முதல் செட்டை கைப்பற்றியதுடன் தொடர்ச்சியாக இரண்டாவது செட்டையும் கைப்பற்றும் முனைப்பில் களமிறங்கினார்.

இருந்தும் சுதாரித்துக் கொண்ட சின்னர் அடுத்த இரு செட்களை 6-3, 7-5 என வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இது வியன்னா ஓபன் தொடரில் ஜானிக் சின்னரின் 2 ஆவது பட்டமாகும். (3)



இந்தியாவில் ராஞ்சியில் நடைபெற்ற தெற்காசிய தடகள சம்பியன்ஷிப்பில் இரண்டாம் இடத்தைப் பிடித்து நாடு திரும்பிய இலங்கை அணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினர் வசம் இருந்த காணி விடுவிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் பரந்தன் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த தனியாருக்கு சொந்தமான 1.5 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டது. இந் நிலையில் விடுவிப்புக்கான ஆவணத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனிடம் மாவட்ட செயலகத்தில் வைத்து இராணுவத்தினர் கையளித்திருந்தனர். குறித்த நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (8-316)

# அஸ்வெசும 2 ஆம் கட்டம் வங்கிக் கணக்குகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அறிவிப்பு

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி நலத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்குத் தகுதி பெற்றும், இதுவரையில் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்காத பயனாளிகள் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபை விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த பயனாளிகளின் பெயர் பட்டியல் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்குத் தெரிவாகி, இதுவரை வங்கிக் கணக்கு ஆரம்பிக்காத பயனாளிகள், தமது பிரதேச செயலகத்திற்குச் செல்ல வேண்டும்.

வங்கிக் கணக்கு ஆரம்பிப்பதற்கான அனுமதி கடிதத்தை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் அக்கடிதத்தை, பயனாளிகளுக்கு இலகுவான ஒரு வங்கிக் கிளையில் சமர்ப்பித்து, அஸ்வெசும நலன்புரி வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும்.

மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வங்கியில் வங்கிக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

இவ்வாறு வங்கிக் கணக்கைத் திறந்த பின்னர், குறித்த வங்கிக் கணக்கு விபரங்களை உடனடியாக பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்குத் தகுதி பெற்று இதுவரையில் வங்கிக் கணக்கு ஆரம்பிக்காத பயனாளிகள், முடிந்தவரை விரைவில் இந்த வங்கிக் கணக்குகளைத் திறந்து, உரிய விபரங்களைப் பிரதேச செயலகத்தில் வழங்குமாறு நலன்புரி நன்மைகள் சபை கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் பாதீடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

(தருமபுரம்)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டிற்கான பாதீடு மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த 28 ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகம், சபையின் நூலகங்கள் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் என்பவற்றில் பொது மக்கள் பார்வையிடலாம் என தெரிவித்துள்ளார். (8-316)

# கிளி.மாவட்டச் செயலகத்தின் இணையத்தளம் அறிமுகம்




(கிளிநொச்சி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.


கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இணையத்தளம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

அதன்படி கிளிநொச்சி மாவட்டச் செயலக இணையத்தளம் https://distseckilinochchi.lk அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் இணைந்து கிளிநொச்சி மாவட்டச் செயலக இணையத்தளத்தினை அறிமுகம் செய்து வைத்தனர்.

இது மாவட்டத்தின் கலைஞர்கள், இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் மற்றும் பௌத்த ஆலயங்களின் வரலாறுகள், பாரம்பரிய உணவுகளின் செய்முறைகள், கலாமன்றங்கள், இசைக் கருவிகள் முதலான விடயங்களை உள்ளடக்கியதாக மாவட்டச் செயலக இணையத் தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 - 03 - 1948 |  | 28 - 10 - 2025 |

## திருமதி.காந்திமதி யோகநாதன் (ஆச்சி)

மலேசியாவை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி மற்றும் இறாகமவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.காந்திமதி யோகநாதன் அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை (28.10.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை தில்லையம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகநாதனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற O.T நடராஜா, காலஞ்சென்ற திலகவதி, O.T செல்வராஜா, காலஞ்சென்ற O.T ஆனந்தராஜா, O.T தர்மராஜா மற்றும் காலஞ்சென்ற இராஜசுலோஜனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் Dr.சுதர்சினி (ஆதார வைத்தியசாலை, நிக்கவரட்டிய), தனுசாந்தினி (விரிவுரையாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்) மற்றும் குகதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.விமலன் (இறாகம வட கொழும்பு போதனா வைத்தியசாலை), அஜந்தன் (மென்பொறியியலாளர்) ஆகியோரின் மாமியாரும் தாருகேஷ், தசரத் அர்வின், ஜஷ்வந்தி மற்றும் வர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

307/2, மகரநுகேகொட, இறாகம. (c-4214) தகவல்- குடும்பத்தினர் 077 315 0288.

# சுகாதாரமற்ற முறையில் இயங்கிய மூன்று கடைகளுக்கு சீல்

(மன்னார்)

பல்வேறு சுகாதார குறைபாடுகளுடன் இயங்கிய மூன்று கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபை எல்லைக்குள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் உணவகங்கள் தொடர்பான ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வந்த வெதுப்பகம், உணவகம் மற்றும் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு இந்த வாரம் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உணவகங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக நகர சபைக்கு கிடைக்க பெற்று வரும் முறைப்பாடுகளின் அடிப்படையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் இனங்காணப்பட்ட நிலையில் குறித்த உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி கால்நடைகள் மடக்கிப்பிடிப்பு

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை அதிரடி



(நெளுக்குளம்)

போக்குவரத்திற்கு இடையூறாக வீதிகளில் அலைந்து திரிந்த கட்டாக் காலி கால் நடைகளை கட் டுப்ப டுத்தும் நோக்கில், புதுக்குடி யிருப்பு பிரதேச சபையினரால் நேற்று முன் தினம் இரவு அதிரடி நடவடிக்கை ஒன்று மேற் கொள்ளப்பட் டது.


அண்மைய நாட்களில் இரவு நேரங் களில் வீதிகளில் நிற்கும் கால் நடைகளால் பல் வேறு விபத்துக்கள் ஏற்பட்டிருந் தன. இதனைத் தடுக்க புதுக் குடியிருப்பு பிரதேச சபை, பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பிர தேச எல்லைக்குட்பட்ட வீதிகளில் கால் நடைகளை மடக்கிப் பிடிக்கும் நட வடிக்கையை முன்னெடுத்தி ருந்தது.

இந்நடவடிக்கையின் போது மொத்தம் 24 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. அவை தற்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளன.

மக்களிடம் பல முறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிமையாளர்கள் தங்கள் கால் நடைகளை கட்டுப்படுத்த தவறியிருந்தனர். இதனால் தவிசாளர் வே. கரிகாலன் தலைமையில் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட கால்நடைகளை மீட்டுக்கொள்ள உரிமையாளர்கள் ஒரு கால்நடைக்கு 10 ஆயிரம்ரூபா தொகையை பிரதேச சபைக் குச் செலுத்த வேண்டும் எனவும் இந் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-299)

# கிளி/முருகானந்தா கல்லூரியில் எழுத்து இலக்கியப் பயிற்சி



(கிளிநொச்சி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் மாணவர்களுக்கு எழுத்து இலக்கியப் பயிற்சி அப் பாடசா லையின் ஆசிரியரும் எழுத்தாளருமான தீபச்செல்வனால் கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

பள்ளி மாணவர்களிடையே கவிதை, சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய ஆர்வங்களை ஏற்படுத்தும் வகையிலும் அவர்களே எழுதுகின்ற வகையிலும் இதன் போது பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

வாசிப்பின் வழியாகவும் எழுத்தின் வழியாகவும் பண்பட்டதும் வளம்கொண்டதுமான இளைய சமூகத்தை உருவாக்க முடியும் என்றும் இத்தகைய பயிற்சிளையும் இலக்கியத் தூண்டுதல்களையும் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தமிழ் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள பாடசாலைகளில் இந்தப் பயிற்சியை எதிர் காலத்தில் முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்தார். (8)

# வடமாகாண ரயில் மார்க்கத்தை தரமுயர்த்தும் பணி ஆரம்பம்

## யாழ்தேவி சேவையில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ரயில் மார்க்கத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் வவுனியா மற்றும் ஓமந்தை இடையேயான பகுதியில் வடமாகாண ரயில் தண்டவாளங்களை சீர்செய்யும் நடவடிக்கையும், வடக்கின் ரயில் மார்க்கத்தை தரமுயர்த்தும் செயற்பாடுகளும் ஒரு வாரத்துக்கு முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் காலை 10.15 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை குறித்த பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. குறித்த பணிகள் காரணமாக யாழ்தேவி ரயில் இயக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து புகையிரதத் திணைக்களம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவ் அறிவிப்பில் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன் துறைக்கு இயக்கப்படும் யாழ் தேவி கடுகதி ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து காலை 6.45 இற்கு பயணத்தைத் தொடங்கி முற்பகல் 11.35 மணியளவில் வவுனியாவைச் சென்றடையும். வவுனியா ரயில் நிலையத்தில் 2 மணி நேரம் 40 நிமிடங்கள் நிறுத்தப்பட்டு பின்னர் வவுனியா ரயில் நிலையத்தில் இருந்து பிற்பகல் 2.15 இற்கு காங்கேசன்துறை நோக்கி தனது சேவையை ஆரம்பிக்கும்.

அத்துடன் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்கு இயக்கப்படும் யாழ்தேவி கடுகதி ரயில் காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து 30 நிமிடங்கள் தாமதமாக முற்பகல் 11 மணிக்கு தனது சேவையினை ஆரம்பிக்கும் என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8)

# உரிமை கோரப்படாத வாகனங்கள் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருட்களாக பாரப்படுத்தப்பட்டு இன்று வரை உரிமை கோரப்படாத கீழுள்ள இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை அலுவலக நாட்களில் பதிவாளரைத் தொடர்பு கொண்டு வாகனங்கள் தொடர்பான உரிமையை இரண்டு மாத காலத்திற்குள் உரிய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தவறும் பட்சத்தில் குறித்த சான்றுப்பொருட்கள் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் 432 ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்கள்:- NW BHH 3290, NP BAE 6333, NP GK 1890, NP XH 0070, NP BFC 1636, NP WJ 7518, NP BHU 5932, NP BHS 2995, EP BEX 9663, NP HL 6911, NP WG 3581, NP HC 0669, NP BAC 5318, NP BIC 0889, NP WD 9473, NP HZ 2345, NP XH 0348, EP MI 6046, NP WN 9727, EP UT 5700, NP MF 0658, NP WM 9918, NP VJ 4762, NP BET 5867, NP XF 9581, NP MI 7280, NP JG 5983, NP XY 8310, NP WU 8528, NP HR 1245, NP BHB 7214, NP WI 3621, NP BIF 6681, NP BDL 4605, WP TL 9723, NP GR 0202, EP BCN 8189, NP BGJ 8171, WP GZ 0854, NP XE 1094, NP BIK 0008, M XL 9473 (எரிந்த நிலையில்), NP VW 8309, NP BRR 4276, NP HD 7481, WP ME 6300, NP XC 4406, NP TH 6361, NP BHN 7873, NP JH 5395, NP WF 7391, NP MP 0226, EP MP 1089, NP BFR 0552, BJD 2448, NP HX 2053, NP WL 7985, NW BIQ 0588, NP WU 1951, NP HO 8921, 500-4435, NP HP 9558, NP JC 3965, NP GW 6856, NP GZ 0155, NP BAN 8906, NP JX 3787, NP XR 0663, NP JT 5198, NP TG 7410, 500-0554, NP VI 8360, NP BIJ 7322, NP BAX 4302, NP TB 7241, றை சைக்கிள்கள்:- NP QY 6901, NP QY 6816, கப் வாகனங்கள்:- UP PP 8303, WP LE 9741, NP PS 9008, முச்சக்கர வண்டிகள்:- NP QA 7623, NP HV 4323, EP AAI 5320, இலக்கத் தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிள்கள்:- Engine No. MC20AAKAF0003, Chassis: MP[illegible]KAR0005(8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 250 | 220 | 120 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 240 | 230 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 150 | 300 | 200 | 200 | 140 |
| தக்காளி | 250 | 250 | 250 | 240 | 190 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 150 | 200 | 80 |
| கோவா | 200 | 200 | 200 | 200 | 160 | 140 |
| கரட் | 200 | 250 | 250 | 250 | 200 | 130 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 50 | 30 |
| புடோல் | 200 | 250 | 150 | 300 | -- | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 200-300 | 250 | 300 | 240 | 230 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 160 | 140 | 140 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 500 | 400 | 300 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 300 | 150 | 110 |
| கருணைக் கிழங்கு | 250 | 220 | 250 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 400 | 400 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 250 | -- | 120 |
| பீற்றூட் | 150 | 120 | 250 | 150 | 100 | 100 |
| கறிமிளகாய் | 350 | 450 | 400 | 500 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 250 | 400 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 600 | 400 | 370 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 300 | 200 | -- | -- |
| கீரை – 1 பிடி | 160 | 80-140 | 150 | 120 | -- | -- |
| தேசிக்காய் | 1500 | 1600 | 2000 | 1500 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 | -- | 155 |
| இராசவள்ளி | 750 | 900 | 1000 | 800 | -- | 700 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 500 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 200 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 60 | -- | 35 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | -- | 40 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 200 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளவில் அதிகரிக்கும் வெப்பம்!

## ஆண்டுக்கு 5.5 இலட்சம் பேர் உயிரிழப்பு

**(வோஷிங்டன்)**

**உலகளவில் வெப்பநிலை அதிகரித்து வருவதால் ஆண்டுதோறும் சுமார் 550,000 பேர் உயிரிழப்பதாக தெரியவந்துள்ளது.**

சர்வதேச மருத்துவ இதழான தி லான்செட் வெளியிட்டுள்ள காலநிலை மற்றும் ஆரோக்கியம் குறித்த புதிய வருடாந்திர அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சிட்னி பல்கலைக்கழகத்தின் வெப்பம் மற்றும் சுகாதார நிபுணரான ஒல்லி ஜே இதனை உறுதிப்படுத்தியதுடன், இது ஆண்டு முழுவதும் ஒவ்வொரு நிமிடமும் வெப்பம் தொடர்பான ஒரு மரணம் நிகழ்கிறது என்பதற்குச் சமம் என்றும், இந்த எண்ணிக்கை மிகவும் அதிர்ச்சியூட்டுவதாகவும் தெரிவித்தார்.

1990 களுடன் ஒப்பிடும் போது, வெப்பம் தொடர்பான உயிரிழப்புகள் 20% இற்கும் மேல் அதிகரித்துள்ளன.

மேலும், வெப்பநிலைகள் மனித ஆரோக்கியத்தில் மட்டுமல்லாமல், பொருளாதாரத்திலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

வெப்பம் காரணமாக உழைப்புத் திறன் குறைந்து, 2024 ஆம் ஆண்டில் உலகளவில் சுமார் 1 ரில்லியன் டொலர் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இரவில் அதிக வெப்பத்தால் ஏற்படும் தூக்க இழப்பு 9% ஆக அதிகரித்துள்ளது.

உலகின் சில பகுதிகள் மனிதர்கள் உயிருடன் இருக்க முடியாத "உடலியல் உச்ச வெப்ப வரம்புகளை" நெருங்கி வருவதாகவும், லத்தீன் அமெரிக்காவில் வெப்பம் தொடர்பான இறப்புகள் இரண்டாயிரமாம் ஆண்டுக்குப் பிறகு இரு மடங்காக உயர்ந்துள்ளதாகவும் இந்த அறிக்கை எச்சரிக்கிறது.

அத்துடன் காட்டுத் தீயினால் வெளியாகும் வெப்ப அலை தாக்கம் 2024 ஆம் ஆண்டில் உச்சத்தை எட்டியதால் 150,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இந்த ஆய்வறிக்கையின் முடிவுகள் நிலைமையின் தீவிரத்தைக் காட்டுவதாகவும் உடனடி நடவடிக்கைகள் தேவை என்றும் விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர். (நி)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இயல்பான வளர்ச்சி பாதைக்கு திரும்பும்

## சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறல்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் 2026 ஆம் ஆண்டளவில் 3.1% என்ற அதன் இயல்பான வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் திணைக்களத்தின் துணை பணிப்பாளர் தோமஸ் ஹெல்ப்லிங் அறிக்கையொன்றில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு இலங்கை சந்தித்த கடுமையான பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து மிக வேகமாக இலங்கை மீண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நீடிக்கப்பட்ட நிதி வசதி மற்றும் நாட்டின் சில மறுசீரமைப்பு காரணமாக, கடந்த ஆண்டு பொருளாதாரம் 5% வரையிலும், இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 4.8% வரையிலும் வேகமாக வளர்ச்சி அடைந்தது.

இது ஒரு நல்ல மீட்சியாக பார்க்கப்படுகிறது.

எனினும் தற்போது அந்த வேகமான மீட்சி முடிவடைந்து, நாட்டின் பொருளாதாரம் இனி ஆண்டுக்குச் சராசரியாக 3.1% என்ற அளவில் சாதாரண வேகத்தில் வளர்ச்சியடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் இந்த மாத தொடக்கத்தில் இலங்கைக்கு விஜயம் செய்து மேற்கொண்ட ஆய்வில் அரசாங்கம் செய்துள்ள பொருளாதார மறுசீரமைப்பு திருப்திகரமாக இருப்பதாகக் கூறி, அடுத்த கட்ட நிதியுதவிக்கான ஒப்புதலை அளித்துள்ளனர்.

குறிப்பாக, மின்சாரத்தை விற்பனை செய்யும் நிறுவனங்கள் நஷ்டம் அடையாமல் இருக்க, மின்சாரத்தின் விலையைச் செலவுக்கு ஏற்றவாறு நிர்ணயிப்பது போன்ற மறுசீரமைப்பு சரியாகப் பின்பற்றப்படுகின்றன என்றும் சர்வதேச நாணய நிதியம் பாராட்டியது.

எதுஎவ்வாறாயினும் பொருளாதாரத்தை முழுமையாகச் சரிசெய்ய, இலங்கை அரசாங்கம் இந்தப் புதிய திட்டங்களை விடாமல் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் 2028 ஆம் ஆண்டுக்கான வருவாய் குறித்த திட்டங்களை இப்போதே விவாதிக்க சர்வதேச நாணய நிதியம் விரும்பவில்லை என்றும் மறுசீரமைப்புகள் தொடர்ந்து வெற்றிகரமாக நடந்தால், நீண்ட கால கவலைகள் தாமாகவே சரியாகும் என நம்புவதாக தோமஸ் ஹெல்ப்லிங் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கடலில் மிதந்து வந்த போத்தலினால் பறிபோன இரு உயிர்கள்

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் கடலில் மிதந்து கொண்டிருந்த போத்தலில் இருந்த திரவத்தை அருந்திய இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த திரவத்தை அருந்திய மேலும் இருவர் தற்போது புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

புத்தளம், நுரைச்சோலை பகுதியில் உள்ள ஒரு மீன்பிடி வாடியில் இருந்தபோது நான்கு பேர் கொண்ட குழு திரவத்தை அருந்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் ஒருவர் இறந்ததை தொடர்ந்து, பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர். அதன் பின்னர் மீன்பிடி வாடியிலிருந்த மற்றொரு நபரின் உடலை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)


# ஓட்டோ, கார் சாரதிகளுக்கான பயிற்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி செயலக அனுசரணையில் முச்சக்கரவண்டி மற்றும் மகிழுந்து சாரதிகளுக்கான நெறிமுறைகள், மனோபாவம் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கான வடக்கு மாகாண பயிற்சித்திட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.மாநகரசபை நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் மற்றும் யாழ்.மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுற்றுலாப் பணியகத் தலைவர் அ.பத்திநாதன் மற்றும் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தலைவர் க.மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# மணல் அகழ்வை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மறவன்புலோ கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென சபை உறுப்பினர் தி.விமலதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இவ்விடயத்தை சபையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், மறவன்புலோவில் தினமும் டிப்பர்கள் மூலம் சட்ட விரோதமாக மணல் அகழப்படுகின்றது.

மணல் கொள்ளை இடம்பெறுகின்ற பகுதிகளில் இரகசியக் கமராக்களைப் பொருத்தி குற்றவாளிகளை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கச்சாய் பகுதியில் மணற் கொள்ளையர்களின் உழவியந்திரம் மோதி அண்மையில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்திருந்தார்.

எனவே இவ்வாறான அசம்பாவிதங்களை தடுக்க மணற் கடத்தலை முற்றாக நிறுத்த வேண்டும்.

மறவன்புலோ கிராமத்தில் கடற்கரையோரம் மணல் அகழப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது என வும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (8-30)

# முஸ்லீம் மக்கள் இடம்பெயர்வின் 35 ஆவது ஆண்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

முஸ்லீம் மக்கள் இடப்பெயர்வின் 35 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை தந்தை செல்வா கலையரங்கில் இடம் பெறவுள்ளதுடன் கிளிநொச்சியில் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இரத்தினபுரம் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை சமாதான அருங்காட்சியகத்தில் இடம் பெறவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## நீல நிறமாக மாறிய நாய்கள்
### ஆச்சரியத்தில் பராமரிப்பாளர்கள்

(கீவ்)

உக்ரைனின் செர்னோபிலில் உள்ள நாய்கள் திடீரென நீலநிறமாக மாறியிருப்பது, விலங்கு பராமரிப்பு குழுவினரை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனின் வடக்கு பகுதியில் உள்ள செர்னோபில் நகரத்தின் அருகே அணுமின் நிலையம் செயற்பட்டு வந்தது. இதன் ஒரு அணு உலையில், 1986இல் விபத்து ஏற்பட்டது. உலகின் மிகவும் மோசமான அணு விபத்தாக கருதப்படும் இதைத் தொடர்ந்து, அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

விபத்துக்குப் பின், அந் நகரத்தின் சுற்றுப்புறங்களில் உள்ள பகுதி, செர்னோபில் விலக்கு மண்டலம் என அறிவிக்கப்பட்டது.

இம் மண்டலத்தில், கதிர்வீச்சுக்குப் பின் வெளியேறிய மக்களால் கைவிடப்பட்ட செல்லப்பிராணிகள் வசித்து வந்தன.

அதன்படி தற்போது அங்கு, 700 நாய்கள் வசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிறமாற்றம் கடந்த வாரம் இல்லை என்றும், கடந்த 39 ஆண்டுகளுக்குப்பின் இதுவே முதல் முறை என்றும் கூறப்படுகிறது.

இதில் ஒரு நாய், முழுவதுமாக நீல நிறத்தில் மாறியுள்ளதாகக் கூறப்படுகிறது. நிற மாற்றத்திற்கான காரணம் என்னவென்று இதுவரை உறுதியாகத் தெரியவில்லை. இது, ஏதாவது ஒரு இரசாயனத்தில் விழுந்திருக்கலாம் எனவும், இதனால், அதன் வெளிப்புறம் நீல நிறத்தில் மாறியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த மாற்றம் இவற்றின் ஒட்டுமொத்த உடல்நலனில் உள்பாதிப்பை ஏற்படுத்தி இருக்காது என நம்பப்படுகிறது. எனினும், இதை உறுதிப்படுத்த முழுமையான சோதனை மேற்கொள்ள வேண்டும் எனக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இந்நாய்களை பிடித்து அவற்றின் நீல நிறத்துக்கான காரணத்தைக் கண்டறிந்து, தேவைப்பட்டால் சிகிச்சை அளிப்பதே தற்போதுள்ள முதன்மையான நோக்கம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த நிறமாற்றம், கதிர்வீச்சால் ஏற்பட்ட மரபணு பிறழ்வாக இருக்காது என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

நிறம் மாறிய போதிலும், இங்குள்ள நாய்கள் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதாக நாய் பராமரிப்புக் குழு தெரிவித்துள்ளது. (நி)

# புளூட்டோனிய ஒ
# ட்ரம்ப் தலையில் இடி
# உருவாகிறது அணு

(மொஸ்கோ)

**அமெரிக்காவுடன் ரஷ்யா கையெழுத்திட்ட புளூட்டோனியம் ஒப்பந்தத்தை புடின் ரத்து செய்து ட்ரம்ப்புக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளார்.**

இது தொடர்பான சட்ட திருத்தத்தில் புடின் கையெழுத்திட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில், புளூட்டோனியம் மேலாண்மை குறித்து அமெரிக்காவிற்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பின்னர், இந்த ஒப்பந்தம் 2010 இல் திருத்தப்பட்டது.

இதன்படி ரஷ்யா தனது கையிருப்பில் உள்ள 34 மெட்ரிக் தொன் புளூட்டோனியத்தை அணு ஆயுதங்களை தயாரிக்க பயன்படுத்தக்கூடாது.

இவற்றை அணுமின் உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

அந்த நேரத்தில், இந்த ஒப்பந்தம் மூலம் சுமார் 17,000 அணு ஆயுதங்களின் உற்பத்தியைத் தடுத்ததாக அமெரிக்கா தெரிவித்தது.

2016இல் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான உறவுகள்

## போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய ஹமாஸ்

(காசா)

பாலஸ்தீனப் பிரதேசத்தில் ஹமாஸ் போராளிக்குழு போர் நிறுத்தத்தை மீறியதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காசாவில் இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல்களைத் தொடங்கின.

இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மத்தியஸ்தம் செய்த ஒரு பலவீனமான ஒப்பந்தத்துக்கான அண்மைய சோதனை இதுவாகும்.

இந்த தாக்குதலின் விளைவாக மத்திய காசா பகுதியில் உள்ள புரைஜ் அகதிகள் முகாமில் ஒரு வீடு தாக்கப்பட்டதில் ஐந்து பேர், காசா நகரத்தின் சப்ரா பகுதியில் உள்ள ஒரு கட்டடத்தில் நான்கு பேர் மற்றும் கான் யூனிஸில் ஒரு காரில் ஐந்து பேர் உட்பட குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)



## தற்கொலை எண்ணங்களுடன்
## Chat GPT உடன்
### இலட்சக்கணக்கான மக்கள் உரையாடல்
## Open AI வெளியிட்ட பகீர் தகவல்

(வோஷிங்டன்)

உலகில் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மனிதர்களுக்கு இடையிலான தொடர்பு முன்னெப்போதும் இல்லாத அளவு எளிமையாகி உள்ளது. அதே சமயம் முன்னெப்போதும் இல்லாத அளவு நவீன யுக மனிதர்கள் தனிமைப்பட்டு போயிருக்கின்றனர்.

மேலும் இளைய தலைமுறையினரிடையே மனத்திடம் குறைந்து சிறிய விடயங்களுக்கே தற்கொலை வரை செல்லும் போக்கும் அதிகரித்துள்ளது.

இதை மெய்ப்பிக்கும் விதமாக முன்னணி செயற்கை நுண்ணறிவு நிறுவனமான Open AI ஒரு அதிர்ச்சியூட்டும் தரவுகளை வெளியிட்டுள்ளது.


அதன் Chatbot சேவையான Chat GPTஐ பயன்படுத்தும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் ஒவ்வொரு வாரமும் தற்கொலை எண்ணங்களைப் பற்றி விவாதித்து வருவதாகவும், இது மிகவும் கவலைக்குரிய விடயம் என்றும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

Open AI மதிப்பீடுகளின்படி, Chat GPT ஐ தற்போது வாரத்திற்கு 800 மில்லியன் பேர் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஒப்பந்தம் ரத்து!
## டியை இறக்கிய புடின்!
## ணுவாயுத ஆபத்து



மோசமடைந்தபோது புடின் புளூட்டோனியம் ஒப்பந்தத்தை இடை நிறுத்தி வைத்தார்.

இந்நிலையில் தற்போது இந்த ஒப்பந்தத்தை முற்றிலுமாக ரத்து செய்யும் சட்டதிருத்தத்தில் புடின் கையெழுத்திட்டுள்ளார்.

இதன்மூலம் ரஷ்யா தடையின்றி அணு ஆயுதங்கள் தயாரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. (நி)

ற்பத்திக்கு
ண்டும் என
ண்டன.
ஒப்பந்தம்
0 அணு
யைத் தடுத்
ந்து.
காவிற்கும்
உறவுகள்

டன்
ன்
பாடல்
கவல்

Chatbot
Chat
ன்படுத்தும்
யனுக்கும்
பயநர்கள்
ாரமும் தற்
எண்ணங்
றி விவா
கவும், இது
லைக்குரிய
றும் அந்
தரிவித்துள்

AI மதிப்
hat GPT ஐ
திற்கு 800
பேர் பயன்


படுத்துகின்றனர்.

அந்த பயநர்களில் 0.15 சதவீதம் பேர் ஒவ்வொரு வாரமும் தற்கொலை உரையாடல்களில் ஈடுபடுகின்றனர். மேலும் அதிகப்படியான பயநர்கள் Chat GPTயுடன் தீவிர உணர்ச்சிப் பிணைப்புகளை வளர்த்துக் கொள்கிறார்கள்.

மில்லியன் கணக்கான பயநர்களிடம் மனநலக் கோளாறுகளின் அறிகுறிகள் காணப்படுகிறது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)




## வெள்ளக் காடானது வியட்நாம்



(ஹானோய்)

வியட்நாமில் பெய்து வரும் கனமழையால் ஹியூ மற்றும் ஹோய் ஆன் உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க நகரங்களின் சுற்றுலாத் தலங்கள் மூழ்கியுள்ளன.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமின், மத்திய நகரமான ஹியூவில், 24 மணி நேரத்திற்குள் 108 செ.மீ., மழை பதிவானது. இது வியட்நாமில் இதுவரை பதிவான அதிகபட்ச மழைப்பொழிவு என்று அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், ஹியூவின் வரலாற்று சின்னமான பெர்ப்யூம் நதியில் நீர்மட்டம் 15 அடி உயர்ந்துள்ளது.

அதே நேரத்தில் யுனெஸ்கோவால் பட்டியலிடப்பட்ட பழங்கால நகரமான ஹோய் ஆனிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

ஹியூ மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளம் வீடுகளை மூழ்கடித்தது.

முக்கிய சாலைகள் துண்டிக்கப்பட்டன.

குடியிருப்பு பகுதிகள், விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

ஹனோய் மற்றும் ஹோ சி மின் நகரங்களுக்கு இடையிலான ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

பெங்ஷென் புயல் வியட்நாமை நெருங்கி வருவதால் மத்திய வியட்நாமில் கனமழை பெய்யும், இதன் விளைவாக வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படும் என்று ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (நி)

## மீண்டும் போர் பதற்றம்
# காசா மீது தாக்குதல் நடத்துமாறு நெதன்யாகு உத்தரவு

(காசா)

காசா பிராந்தியம் மீது உடனடியாக பலமான தாக்குதல்களை மேற்கொள்ளுமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்க பாதுகாப்பு கலந்தாலோசனைகள் நிறைவடைந்ததனை தொடர்ந்து, பிரதமர் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

காசா சமாதான ஒப்பந்தத்தை ஹமாஸ் தெளிவாக மீறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளது.

ஹமாஸ் போராளிகளினால், இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்ட உடல் பாகங்கள், இன்னும் கணக்கில் இல்லாத 13 பணயக் கைதிகள் எவருடையதும் அல்ல என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினர் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறிச் செயற்பட்டு வருவதாக ஹமாஸ் போராளிகள் குற்றம் சுமத்தியுள்ளனர் என்பதுடன் தெற்கு காசாவில் மீட்கப்பட்ட ஒரு சிறை கைதியின் உடலை ஒப்படைக்கும் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்துள்ளனர்.


இதேவேளை, இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் கட்டுப்பாட்டில் காணப்படும் மஞ்சள் கோட்டிற்கு கிழக்கே உள்ள பகுதியில் ஹமாஸ் தாக்குதல் நடத்தியதாக, ஒரு இஸ்ரேல் இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இந்த "மஞ்சள் கோடு" என்பது, அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் கீழ், இஸ்ரேல் காசா பகுதியில் இருந்து விலகிய எல்லையை குறிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள்
# கட்டுநாயக்கவில் கைது



(கொழும்பு)

இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் நேற்று புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் ஆவர்.

இலங்கையர்கள் மூவரும் படகு மூலம் சட்டவிரோதமாக இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ள நிலையில் அந் நாட்டு பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டு நேற்று நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையர்கள் மூவருக்கும் எதிராக நீதிமன்றில் பல வழக்குகள் தொடரப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா- 14 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC, MSc, QS
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16115

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா: 25
உயரம்:5'6"
தகைமை/தொழில்-Dip in media, Reporter
எதிர்பார்ப்பு: பட்டதாரி, ஆசிரியர்
தொ.இ: B/16118

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி-பா-45 1/2
2இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L, Ambulance Driver
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: B/16119

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
உயரம்:6'2"
தகைமை/தொழில்: O/L, Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16122

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:விசாகம்
10இல்சூரிசெவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSC,MBA,Senior Marketing Executive
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16124

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: பூரம்
3இல்சூரி செவ்
கி-பா: 26 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16130

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in ICT
எதிர் பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/16134

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-அத்தம்
2இல்செவ்
கி.பா -23
உயரம்-5"4"
தகைமை/தொழில்: BSC, PHD, QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16137

பிறப்பு-1987-RC
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - A/L, Care Taker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16138

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:கேட்டை
12இல்சூரி செவ்
கி.பா - 03
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - MBBS
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/16142

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 473



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கழுதையும் கற்றுக் கொடுக்கும்!

ஒரு சராசரி மனிதனுடைய இயல்பு என்ன? இன்பம் வந்தால் துள்ளிக் குதிப்பான். துன்பம் வந்தால் சோர்ந்து போய் ஒரு மூலையிலே உட்கார்ந்துவிடுவான். இவன்தான் சராசரி மனிதன். ஆனால் ஒருவன் இன்பம் வந்தால் அதற்காக மகிழ்ச்சியடைவதில்லை. துன்பம் வந்தால் அதற்காக சோர்ந்து போவதில்லை. அப்படி இருந்தால் அவன் சாதாரண ஆள் இல்லை. ஒரு ஊரிலே ஒரு ஞானி இருந்தார். அவரைத் தேடிக்கொண்டு ஒரு பெரியவர் வந்தார்.

"ஐயா!". ஞானத்திலே சிறந்த ஞானம் எது" என்று கேட்டார்.

இதற்கு அந்த ஞானி என்ன பதில் சொன்னார் தெரியுமா? "இன்பத்தினால் மகிழ்ச்சியடையாமலும் துன்பத்தினால் சோர்வடையாமலும் இருக்கிறதுதான் அது!" அப்படி என்றாராம்.

"சரி சுவாமி. அப்படிப்பட்ட ஞானம் உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டிருக்கிறார் இவர். "அதை ஒரு கழுதையிடமிருந்துதான் நான் கற்றுக்கொண்டேன்!" என்றாராம் அவர்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மாதிரியாக முழித்திருக்கிறார். இதை அவர் புரிந்துகொண்டார். நாளைக்குக் காலையிலே நம்முடைய ஆசிரமத்துக்கு வாருங்கள். புரிய வைக்கிறேன்!" என்றார்.

"சரி என்று இவர் போய் விட்டார். மறுநாள் காலையிலே ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார். ஞானி அவரைக் கூப்பிட்டு உட்கார வைத்தார்.

வாருங்கள்! வந்து இப்படி உட்காருங்கள். கொஞ்ச நேரத்திலே இந்த வழியாக ஒரு கழுதை போகும். அதைக் கவனியுங்கள்!" என்றார்.

இவருக்கு இன்னமும் ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. இருந்தாலும் அந்த ஞானி சொன்னது மாதிரியே உட்கார்ந்திருந்தார்.

கொஞ்ச நேரத்திலே அந்த வழியாக ஒரு கழுதை போனது, அதன் முதுகு நிறைய அழுக்கு மூட்டைகள். அதை சுமந்துகொண்டு போகுது. ஒரு சலவைத் தொழிலாளி அதை ஓட்டிக்கொண்டுப் போகிறார்.

கொஞ்ச தூரத்திலே ஒரு ஆறு இருக்கிறது. அங்கே போய் துணியெல்லாம் சுத்தப்படுத்திக்கொண்டு மாலை திரும்பி இந்த வழியாகவே வருவார்கள். ஞானி சொன்னது மாதிரியே இந்தப் பெரியவர் அழுக்கு மூட்டையை சுமந்துகொண்டு போற அந்தக் கழுதையை கவனித்தார். கழுதை போய்விட்டது. அதன்பின் ஞானியைத் திரும்பிப் பார்த்தார். இப்போது அந்த ஞானி சொன்னார். "மாலை வரைக்கும் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்" என்றார். அதே மாதிரி இவரும் இருந்தார். மாலை நேரம் அந்த ஞானி சொன்னார்.

"ஐயா! இப்போது கொஞ்ச நேரத்திலே அந்தக் கழுதை இந்த வழியாக திரும்பி வரும் அதையும் கவனியுங்கள்!" என்றார்.

இவரும் கவனித்தார். கழுதை வந்தது. அது முதுகிலே சலவை செய்யப்பட்ட துணி மூட்டையை அது பாட்டுக்குச் சுமந்துகொண்டுப் போய் கொண்டிருக்கிறது. பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. பொறுமை இழந்துவிட்டார். "சரி சுவாமி!" இந்தக் கழுதைக்கும் உங்கள் ஞானத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்றார்.

இப்போது அந்த ஞானி விளக்கினார்.

ஐயா, இந்தக் கழுதை இதே மாதிரி தினமும் காலையிலே அழுக்கு மூட்டைகளைச் சுமந்துகொண்டு ஆற்றுக்குப் போகுது. மாலையிலே வெண்மையான சுத்தமான துணிகளைச் சுமந்துகொண்டு திரும்பி ஊருக்குப் போகிறது. காலையிலே இது போகும்போது முதுகிலே அழுக்கு மூட்டைகளைச் சுமந்துகொண்டு போகிறோமே! என்ற வருத்தம் அதற்கு இல்லை! சாயந்தரம் திரும்பி வரும்போது சுத்தமான துணிகளை சுமந்துகொண்டு வருகிறோமே என்ற மகிழ்ச்சியும் அதற்கு இல்லை! இதைப் பார்த்துத்தான் நானும் அது மாதிரி ஞானத்தைக் கற்றுக்கொண்டேன்!" என்றார். அதனாலே யார் கற்றுக் கொடுக்கிறார்கள் என்பதைவிட எதைக் கற்றுக் கொள்கிறோம் என்பதுதான் முக்கியம்.

ஒரு சினிமா பார்க்கிறோம். ஒரு அருவி கொட்டுவதுமாதிரி காட்சி வருகிறது. தண்ணீர் வழிகிறது. படம் முடிந்ததும் பார்த்தால் அந்த திரை நனைந்து போயா இருக்கும்? ஒரு தீப்பிடித்து எரிகின்ற காட்சியை பார்க்கின்றீர்கள். காட்சி முடிந்ததும் அந்த வெண்திரையே கருகிப் போயா இருக்கும்? படத்திலே வரும் தண்ணீரும் நெருப்பும் அந்தத் திரையை பாதிப்பது இல்லை. நாம் அந்தத் திரை மாதிரி இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தப் பக்குவம் வந்துவிட்டால் இன்பமும் துன்பமும் நம்மை எதுவும் செய்யாது! ஒரு சினிமாவை பார்க்கின்ற வரைக்கும் சிரிக்கலாம். அழலாம். பார்த்துவிட்டு வெளியிலே வரும்போது அழுதுகொண்டே வரக்கூடாது!

ஒருவர் வந்தார் அப்படி! படம் முடிந்து வெளியே வரும்போது அருவி மாதிரி கண்ணீர் சிந்திக்கொண்டே வந்தார். "ஏன். சார் படம் அவ்வளவு சோகமா?" என்று கேட்டார் இன்னொருத்தர்.

"இல்லை சார். கூட்டம் ரொம்பக் குறைவு சார். மொத்தம் படம் பார்க்க வந்தவர்களே 15 பேர்தான் சார்!" என்றார் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே!

"அதற்கு நீங்கள் ஏன் சார் அழுகிறீர்கள்?" என்றார் இவர்.

"இந்தப் படத்தோட தயாரிப்பாளரே நான்தான் சார்!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை முழுமைப்படுத்தி தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

**முத்து ஐயன்கட்டு குளத்தின் கீழான 4,5 ஆம் வாய்க்கால் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் மின்மாற்றி பொருத்தப்படாமல் காணப்படுகின்றது. இதனால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தட்டையமலைக் கிராமமக்கள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியாமல் பாரிய வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு - முத்து ஐயன்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவிற்குட்பட்ட முத்து ஐயன்கட்டுக்குளத்தின் கீழ் ஏற்று நீர்ப்பாசனத்தினூடாக விவசாயிகளால் உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

குறித்த ஏற்று நீர்ப்பாசனத்திற்கென எரிபொருள் பயன்பாட்டில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தநிலையில், குறித்த நீர்இறைக்கும் இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால் விவ சாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கும் முகங்கொடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் விவசாயிகளின் இடர்பாட்டைக் கருத்திற்கொண்டு கடந்த 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த ஏற்று நீர்ப்பாசனத்திற்கு மின் பயன்பாட்டில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பொருத்துவதற்கும், நீர்த்தாங்கிகளை அமைத்து நீரினைச் சேமித்து ஏற்று நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக முத்துஐயன் கட்டின் 4,5ஆம் வாய்க்கால் பிரிவுகளுக்கும், 6,7,8 ஆம் வாய்க்கால் பிரிவுகளுக்குமே இவ்வாறு தனித்தனியே மின் பயன்பாட்டில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பொருத்துவதற்கும், நீர்த் தாங்கிகளை அமைப்பதற்கும் விசேட திட்டமொன்றினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

அதேவேளை கடந்தகாலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது குறித்த திட்டம் இடைநிறுத்தப்பட்டு பின்னர் மீளவும் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தற்போது குறித்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு




ஐந்து வருடகாலங்களுக்கு மேலாகியுள்ள நிலையில் 4,5 ஆம் வாய்க்கால் பிரிவுகளுக்குரிய குறித்த ஏற்றுநீர்ப்பாசனத்திட்டம் முற்றுப்பெறாமல் காணப்படுகின்றது.

எனவே குறித்த பிரிவுகளுக்குரிய ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தை முழுமைப்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான வசதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்படுத்தி தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

### பூசணிக்காயை சந்தைப்படுத்த முடியாமல்

# அவதிப்படும் விவசாயி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரம் கொலணியைச் சேர்ந்த விவசாயி ஒருவருக்குத் தான் அறுவடை செய்த சுமார் 10 ஆயிரம் கிலோவுக்கு அதிகமான பூசணிக்காயை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த கமலராஜன் என்ற விவசாயி சுமார் நான்கு ஏக்கர் காணியில் பூசணியை பயிரிட்டுள்ளார். இதற்காக நான்கு இலட்சம் வரை செலவும் செய்திருகின்றார்.

இந்த நிலையில் பூசணிக் காய்களை அறுவடை செய்து விற்பனை செய்வதற்காகச் சந்தைக்கு கொண்டு சென்ற போது அவரால் அதனை சந்தைப்படுத்த முடியவில்லை.

ஆரம்பத்தில் கிலோ 20 ரூபாவுக்கு கேட்டுள்ளனர். இப்போது அந்த விலைக்கும் எவரும் கொள்வனவு செய்வதாக இல்லை எனத் தெரிவித்த அவர் சந்தைக்கு கொண்டு சென்ற பூசணிக் காய்களை மீண்டும் வீட்டுக்குக் கொண்டு வந்து குவித்து வைத்திருகின்றார்.

இவை நாளுக்கு நாள் பழுதடைகின்றன எனவும் விவசாயத்தை கைவிட்டுவிடுவோமா என்ற மனநிலை தோன்றுவதாகவும் தெரிவித்தார். (8)

# சட்டவிரோத மணல் அகழ்வு இரு உழவியந்திரங்கள் மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலிப் பகுதியில் நேற்றையதினம் புதன் கிழமை அதிகாலை வேளையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு உழவியந்திரங்கள் கொடிகாமப் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளன.



இதன்போது சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைப்பற்றப்பட்ட உழவியந்திரங்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (8-30-33)

# இராசிபலன்

30.10.2025
ஐப்பசி 13, வியாழக்கிழமை
நவமி பின்னிரவு 5.22 மணி

திருவோணம் பிற்பகல் 2.52 மணிவரை
சுப நேரம் 7.33- 9.03 மணிவரை
இராகுகாலம் 1.33 -3.03 மணிவரை

சந்திராஷ்டமம்- புனர்பூசம், பூசம்.

வளவன்



**மேஷம்** – பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.



**கடகம்** – நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம் பெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**துலாம்** – செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.



**மகரம்** – பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொட்ட காரியங்கள் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.



**ரிஷபம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காண்பீர்கள்.



**சிம்மம்** – சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



**விருச்சிகம்** – சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வளர்ச்சி கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



**கும்பம்** – சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



**மிதுனம்** – உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் விரயம் மேலோங்கும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.



**கன்னி** – நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மன நிறைவு கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.



**தனுசு** – செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.



**மீனம்** – விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

பாதையில்லாத போதும் உன் சுவடுகளை பதிய வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்கியின்

# பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 897





பிரம்மராயரே! இம்மாதிரி நடவடிக்கையை உம்மிடம் நான் எதிர்பார்க்கவில்லையே! ஒரு வேளை அதற்கு மிக அவசியமான காரணம் ஏதேனும் இருந்திருக்கலாம். அப்படியானால் எனக்குத் தெரிவிக்கலாமல்லவா? அல்லது எல்லாருமே நான் நோயாளியாகி விட்டபடியால் என்னிடம் ஒன்றுமே சொல்ல வேண்டியதில்லை, என்னை எதுவும் கேட்க வேண்டியதுமில்லை என்று வைத்துக் கொண்டுவிட்டீர்களா? அருள்மொழிவர்மன் கடலில் மூழ்காமல் தப்பிக் கரை சேர்ந்து நாகப்பட்டினம் புத்த விஹாரத்தில் இருப்பதாகக் குந்தவை கூறுகிறாள். அதைப் பற்றிச் சந்தோஷப்படுவதா, வருத்தப்படுவதா என்று எனக்குத் தெரியவில்லை. கரை ஏறியவன் ஏன் இவ்விடத்துக்கு வரவில்லை? அவன் தப்பிப் பிழைத்து பத்திரமாக இருக்கும் செய்தியை ஏன் இதுவரை எனக்கு ஒருவரும் தெரியப்படுத்தவில்லை? மந்திரி! என்னைச் சுற்றிலும் நான் அறியாமல் என்னவெல்லாமோ நடைபெறுகிறது. என்னுடைய ராஜ்யத்தில் எனக்குத் தெரியாமல் பல காரியங்கள் நிகழ்கின்றன. இப்படிப் பட்ட நிலைமையில் உயிரோடிருப்பதைக் காட்டிலும் என்று சக்கரவர்த்தி கூறி வந்தபோது அவர் தொண்டை அடைத்துக் கொண்டது, கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது.

குறுக்கே பேசக்கூடாதென்ற மரியாதையினால் இத்தனை நேரம் சும்மாயிருந்த அநிருத்தர் இப்போது குறுக்கிட்டு, "பிரபு! நிறுத்துங்கள். தங்களுடன் எனக்கு நட்பு ஏற்பட்டு நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு நாளும் தங்களுடைய நலனுக்கு எதிரான காரியம் எதுவும் செய்யவில்லை.இனியும் செய்யமாட்டேன். தங்களுக்கு வீண்தொல்லை கொடுக்க வேண்டாம் என்ற காரணத்துக்காக இரண்டொரு விடயங்களைத் தங்களிடம் சொல்லாமல் விட்டிருக்கலாம். அது குற்றமாயிருந்தால் மன்னித்துவிடுங்கள். இப்போது தாங்கள் கேட்டவற்றுக்கெல்லாம் மறு மொழி சொல்கிறேன். கருணை கூர்ந்து அமைதியாயிருக்க வேண்டும்" என்று இரக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

"முதன்மந்திரி! இந்த ஜன்மத்தில் எனக்கு இனி மன அமைதி இல்லை. அடுத்த பிறவியிலாவது மன அமைதி கிட்டுமா என்று தெரியாது. என் அருமை மக்களும் என் ஆருயிர் நண்பராகிய முதன் மந்திரியும் எனக்கு எதிராகச் சதி செய்யும் போது."

"பிரபு, தங்களுக்கு எதிராகச் சதி செய்பவர்கள் யார் என்பதைச் சீக்கிரத்தில் அறிந்து கொள்வீர்கள். அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தைப்பட்டவன் அல்ல. இந்த முதன்மந்திரி பதவியை இப்போது நான் பெயருக்காகவே வைத்துக் கொண்டிருக்கிறேன். பெரிய பழுவேட்டரையரிடமே இந்தப் பதவியைக் கொடுத்து விடுகிறேன் என்று முன்னமே பல தடவை சொல்லியிருக்கிறேன். இப்போதும் அதற்குச் சித்தமாயிருக்கிறேன். என் பேரில் சிறிதளவேனும் தங்களுக்கு அதிருப்தி இருந்தால்"

"ஆம் முதன்மந்திரி, ஆம்! எந்த நேரத்திலும் என்னைக் கைவிட்டுப் போய்விட நீங்கள் எல்லோருமே சித்தமாயிருக்கிறீர்கள். என் மூச்சுப் போகும் வரையில் என்னுடன் இருந்து என்னுடன் சாகப் போகிறவள் இந்த மலையமான் மகள் ஒருத்தி தான்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## புத்திபலம்



(நேற்றைய தொடர்ச்சி)

இளங்கோ மேடு ஏறிப் போய் மறுபடியும் இறக்கத்தில் இறங்கி வண்டியில் கட்டப்பட்டிருந்த கயிறை இறுக்கமாகப் பிடித்தான்.

"ம்! இழுக்கலாம்!" என்று கத்தினான். அந்த மூன்று நண்பர்களும் இளங்கோதான் கயிறு இழுப்பதாய் நினைத்துக் கொண்டு மிகச் சாதாரணமாய் இழுத்தனர்.

அவர்கள் நினைத்தது போல் அது அவ்வளவு சாதாரணமாய் இழுபடவில்லை.

திடீரென்று "இளங்கோவுக்கு பலம் இருக்கிறதோ' என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். ஆனால், இழுப்பது மிகவும் கடினமாக இருந்தது.

மூன்று பேர் முகத்திலும் திகில் பரவியது. ஒரு நோஞ்சான் பயலிடம் தோற்றுப் போனால் அது எத்தனை அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலங் கொண்ட மட்டும் கயிறை இழுத்தனர்.

எதிர்ப்பக்கமிருந்த இளங்கோ, தான் இழுப்பதை மெல்ல மெல்ல விட்டுக் கொண்டே இருந்தான். வண்டி இப்பொழுது மெல்ல மேட்டில் ஏறத் துவங்கியது. இளங்கோ தான் மெல்ல பலத்தை இழந்து மேலே வருகிறான் என்று நினைத்த அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. "இந்த நோஞ்சான் பயலுக்கு ஏது இவ்வளவு பலம்" என்று நினைத்தவாறே மீண்டும் கயிறை வேகமாக இழுத்தனர்.

கடைசி நேர இழுவையில் சரக்கு வண்டி மேட்டின் மேலே ஏறிவிட்டது. அதைப் பார்த்துக் கொண்டு சிரித்தபடி வந்தான் இளங்கோ.

அவர்களுக்கு அப்பொழுதுதான் விடயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை என்று.

மூவர் முகத்திலும் அசடு வழிந்தது. இறக்கத்தில் இறங்கி அவர்களிடம் வந்த இளங்கோ, "மூளை பலம் என்பது இது தான்," என்று சொல்லி நமுட்டு சிரிப்பு சிரித்துவிட்டு, தனது வண்டியை சமதளத்தில் மிகவும் லாவகமாக இழுத்துக் கொண்டு போனான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது.
*– கர்மவீரர் காமராஜர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டு மக்களை ஈர்க்கும் ஜனாதிபதி அநுரவின் எளிமை

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் செல்வாக்கு நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இதற்குக் காரணம் ஜனாதிபதி அநுரவின் எளிமையும் ஊழல் ஒழிப்பு – போதை ஒழிப்பு ஆகியவற்றில் அவர் காட்டுகின்ற அதீத கருசனையுமாகும்.

ஆக, இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த எவரும் இப்படியொரு மக்கள் செல் வாக்கைப் பெற்றிருக்கவில்லை என்று கூறு மளவுக்கு ஜனாதிபதி அநுரவின் செல்வாக்கும் அவர் மீதான மதிப்பும் நம்பிக்கையும் மக்கள் மத்தியில் உயர்ந்து வருகிறது என்பதை ஏற்றுத் தானாக வேண்டும்.

ஆம், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஒரு பிளாஸ்ரிக் கதிரையில் அமர்ந்திருந்து, கையில் உணவுத் தட்டை ஏந்தியவாறு உணவு உண்ணுகின்ற காணொளி வெளியாகியதில் இருந்து, இப்படி ஓர் எளிமையா! என்று நாட்டு மக்கள் திகைப்புற்றுள்ளனர்.

தவிர, ஜனாதிபதி அநுரவின் தாயார் முச்சக்கரவண்டியொன்றில் வைத்தியசாலைக்குச் சென்று வருகின்ற காணொளியானது; ஜனாதிபதி அநுர தனக்கோ அல்லது தனது குடும்பத்துக்கோ அரச சலுகைகள் எதனையும் பயன்படுத்தவில்லை என்பதை உறுதி செய்கிறது.

உண்மை. ஒரு நாட்டு ஜனாதிபதியின் தாயார் செல்லக்கூடிய வாகனம், அதன் பின்னால் அணிவகுக்கக்கூடிய படைத்தரப்புகள் இன்னும் புடைசூழக்கூடிய அரசியல்வாதிகள் என்ற படோபகாரங்கள் நாம் அறிந்ததே.

ஆனால் அவற்றையெல்லாம் கடந்து, அரச சொத்துக்களையோ அரச சலுகைகளையோ முற்று முழுதாக நிராகரித்து ஆட்சிக்கு முன்னர் எப்படித் தனது தாயாரின் நிலைமை இருந்ததோ அதிலிருந்து இம்மியும் பிசகாமல், எளிமையான வாழ்வைத் தொடருவதென்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய பெரு விடயமாகும்.

இத்தகைய தலைவர்கள் இந்த நாட்டுக்கு ஏலவே கிடைத்திருப்பார்களாயின், நாட்டின் ஏகப்பட்ட சொத்துக்கள் ஊழல்வாதிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து தப்பித்திருக்கும்.

நாட்டின் பொருளாதாரமும் உன்னதமாக இருந்திருக்கும்.

பரவாயில்லை. இப்போதும் காலம் கடந்து விடவில்லை. இந்த நாட்டில் ஊழல் புரிந்தவர்களை – மோசடி செய்தவர்களைக் கைது செய்து அவர்கள் முறையற்ற முறையில் சேர்த்த சொத்துக்களைப் பறிமுதல் செய்து அரச உடைமையாக்க வேண்டும்.

அதேபோல இந்த நாட்டின் இளைஞர்களைக் கந்தறுக்கும் போதைப்பொருளை முற்றற ஒழித்து, போதையற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதும் அவசியம்.

இதனை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் அவரது அரசும் செய்யும்போது; நாட்டு மக்கள் இன்னும் இன்னும் நேர்மையை நாடுவர். அதைக் கடைப்பிடிப்பர். அதற்காகப் பாடுபடுவர். ஊழலற்ற நீதியான நாடாக நம் இலங்கைத் திருநாடு திகழும்.

## 11 இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள்

## கழிவுகளைப் பொதுவெளியில் வீசுவோருக்கு செக் வைத்த நல்லூர்ப் பிரதேசசபை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில், பொது இடங்களில், வீதிகளில் கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராகக் கடுமையான மற்றும் அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

நல்லூர்ப் பிரதேசத்தில் கழிவகற்றல் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களினை நல்லூர் பிரதேசசபை மேற்கொண்டு வருகின்றது.

அது மிகப்பெரிய சவாலாகக் காணப்படுகின்ற போதும் அசாத்தியமானதை சாத்தியமாக்கி நாம் தொடர்ந்தும் பயணிக்கின்றோம்.

அதிகளவில் கழிவுகள் கொட்டப்படும் 11 பொது இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டு அங்கு கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டு தினமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கண்காணிப்பு கமராக்கள் மூலம் அடையாளப் படுத்தப்படும் நபர்கள் கிராம சேவையாளர்கள் ஊடாக விபரங்கள் பெறப்பட்டு அபராதம் விதிக்கப்படுகின்றது.

மேலும் வாகனங்களில் வந்து கழிவுகளை வீசுபவர்களின் வாகன இலக்கங்கள் மோட்டார் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அவர்கள் மூலமாக அபராதம் விதிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகப் பிரதேசசபையில் ஒரு தனி அலகும் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் தண்டப் பணமாக இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

பொது இடங்களில் கழிவுகளை வீச வேண்டாம் எனப் பல தடவைகள் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும் சிலர் அதனை அலட்சியம் செய்து வருவதாகவும் இத்தகைய பொறுப்பற்ற மக்கள் கூட்டத்தினரே இத்தகைய கடுமையான பொறிமுறைக்குப் பிரதேசசபையை இட்டுச் சென்றதாகவும் தவிசாளர் மயூரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கண்காணிப்பு மற்றும் அபராதம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் கழிவுகள் வீசும் செயற்பாடுகள் இன்னும் முற்றாக நிறுத்தப்படாத நிலையில் காலத்தின் தேவை கருதி இந்தச் செயற்பாட்டினை நிறுத்துவதற்குரிய கடுமையான நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்த நேரிடும் என எச்சரித்ததோடு பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுமாறும் அறிவுறுத்தியுள்ளார். (ம-7,104)

## பொது இடங்களில் இனி பட்டாசு வெடிக்கத் தடை

### பரு.நகரசபை அதிரடி

பட்டாசுகள் கொழுத்துவதனால் ஏற்படும் சூழல், காற்று மாசு என்பனவற்றைக் கருத்தில் கொண்டு பருத்தித்துறை நகரசபை அதிரடித் தீர்மானம் ஒன்றினை எட்டியுள்ளது.

அதன் பிரகாரம் நாளை மறுதினம் (01) சனிக்கிழமை முதல் பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட பொது இடங்கள், மக்கள் கூடும் பிரதேசங்களில் பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் விதமாகவும் காற்று, சூழல் மாசடையும் விதமாகவும் பட்டாசுகளைக் கொழுத்துபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் வின்சன் டி போல் டக்களஸ் போல் அறிவித்துள்ளார். (ம-7,60)

## பருத்தித்துறையில் கனரக வாகனங்கள் பயணிக்க விசேட நடைமுறை

### பரு.பிரதேச சபை தீர்மானம்

மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன் வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற மாதாந்த அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது .

குறித்த அமர்வில் மேலும் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதன்பிரகாரம் பாடசாலை நேரமான காலை 6.30 முதல் 8.00 மணி வரையிலும் பிற்பகல் 12.30 முதல் 2.30 மணி வரையிலும் கனரக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள நூறு மாணவர்களுக்குக் கொடுப்பனவு வழங்குதல், பாலூட்டும் தாய்மாருக்கான போசாக்கு உணவு வழங்குதல் உட்பட பல பயன்மிகு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ம-7,60)

## நீதிமன்ற வளாகத்தில் பிஸ்டல் துப்பாக்கி

### பொலிஸார் தீவிர விசாரணை

கல்கிஸ்ஸை நீதிமன்ற வளாகத்திலிருந்து அநாதரவான நிலையில் பிஸ்டல் ரகத் துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கியானது ஏதேனுமொரு குற்றச் செயலுக்காக நீதிமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் இது தொடர்பில் தீவிர விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (ம-7)

## விசா, கடவுச்சீட்டு சேவைகள் நேரடியாகக் கையாளப்படும்

### இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி முதல் இந்தியாவுக்கான விசா, கடவுச்சீட்டு உள்ளடங்கலாக அனைத்துத் தூதரக சேவைகளும் நேரடியாகவே கையாளப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், கண்டி உதவி உயர்ஸ்தானிகராலயம் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள துணைத் தூதரகம் ஆகியவற்றினால் குறித்த சேவைகள் நேரடியாகக் கையாளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நெடுந்தீவுக் கடலில் கைதான இந்திய மீனவர்களின் மறியல் காலம் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களுக்குமான விளக்கமறியல் காலம் மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

நெடுந்நீவுக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி 12 இந்திய மீனவர்களும் கடந்த 09 ஆம் திகதி 17 மீனவர்களும் மொத்தமாக 29 மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (29) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதவான் 29 மீனவர்களையும் எதிர்வரும் 07ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கரிடமிருந்து புதிய HONOR Magic V5 Foldable ஸ்மார்ட்ஃபோன் அறிமுகம்

சிங்கர் ஸ்ரீ லங்கா பிஎல்சி. புதிய HONOR Magic V5 foldable ஸ்மார்ட்ஃபோனை அறிமுகம் செய்து, உயர்தர ஸ்மார்ட்ஃபோன் அனுபவத்தை மேம்படுத்தி மாற்றியமைத்துள்ளது. கலைத்திறன், நுண்ணறிவு மற்றும் செயற்பாட்டுத் திறன் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மாதிரி புதியதொரு சகாப்தத்தின் பயணமாக அறிமுகமாகிறது. இது பாவனையாளர்களுக்கு இதுவரை காலமும் கிடைத்திராத செயல்திறனையும் படைப்பாற்றலையும் கொண்டுவர உதவுகிறது.

HONOR Magic V5 இல் கண்கவர் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப சிறப்பு ஆகியன அடங்கியிருப்பதுடன், unfold செய்திருக்கையில் 4.2 mm அடர்த்தியை மாத்திரம் கொண்டிருப்பதுடன், 217g எனும் எளிமையான எடையையும் கொண்டது. இதுவரை தயாரிக்கப்பட்ட fold செய்யக்கூடிய ஸ்மார்ட்ஃபோன்களில் slim ஆன மற்றும் எளிதில் கொண்டு செல்லக் கூடியதாக அமைந்துள்ளது. இந்த சாதனம் dual HDR display ஐ கொண்டுள்ளதுடன், 5000 nits எனும் peak brightmexx ஐ கொண்டிருப்பதால், தெளிவான காட்சியமைப்பை வழங்குகிறது.

இரு திரைகளிலும் pen ஐ பயன்படுத்தமுடிவதுடன். வரைதல், குறிப்பெடுத்தல் அல்லது பலதரப்பட்ட பணிகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பவர்களுக்கு இந்த இரட்டை high-definition திரை ஒப்பற்ற அனுபவத்தை வழங்குவதாக அமைந்திருக்கும்.




சிங்கர் ஸ்ரீ லங்காவின் குழும முகாமைத்துவ பணிப்பாளர் மஹேஷ் விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில், "HONOR Magic V5 சாதனத்தை அறிமுகம் செய்வதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். புத்தாக்கம் மற்றும் வடிவமைப்புத்திறன் ஆகியவற்றை ஒன்றிணைத்ததாக இந்த சாதனம் அமைந்துள்ளது.

இந்த fold செய்யக்கூடிய ஸ்மார்ட்ஃபோன் ஊடாக உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தை இலங்கையின் நுகர்வோருக்கு கொண்டு வருவதில் நாம் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பு பிரதிபலிக் கப்பட்டுள்ளதுடன், உயர்ந்த வினைத்திறனை பெற்றுக்கொடுப்பது மட்டுமன்றி, சிறந்த எதிர்கால மொபைல் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதையும் காண்பிக்கிறது."என்றார்.

தெற்காசிய பிராந்தியத்திற்கான HONOR இன் தலைவர் ஜோர்ஜ் செங் கருத்துத் தெரிவிக்கையில், "வடிவமைப்பு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் HONOR இன் தலைமைத்துவத்திற்கான எடுத்துக்காட்டாக Magic V5 அமைந்துள்ளது என்றார்.

தொலைபேசியின் உண்மையான வலு, அதன் மதிநுட்பமான AI-driven அனுபவத்தில் அடங்கியுள்ளது. அதன் split-screen AI assistant ஊடாக இணையதள சந்திப்புகளில் பாவனை முதல் பங்கேற்பது வரை, பாவனையாளர்களுக்கு இரு திரைகளிலும் பல செயற்பாடுகளை ஒப்பற்ற வகையில் மேற்கொள்ள முடியும். அனைத்தும் ஸ்மார்ட்டான ஏற்பாடு மற்றும் மிருதுவான வினைத்திறன் போன்றவற்றினால் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தொலைபேசியின் கெமரா கட்டமைப்பு என்பதும் உயர் திறன் கொண்டதாக அமைந்துள்ளது. பிரதான கெமரா 64MP Ultra Sensing Periscope Telephoto திறன் கொண்டதாக அமைந்துள்ளதுடன், நுணுக்கமான காட்சியம்சங்கள் மற்றும் பரந்த வர்ணங்களை குறைந்த வெளிச்சத்திலும் தெளிவாக எடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

HONORஇன் மேம்படுத்தப்பட்ட image processing தொழில்நுட்பத்துடன், HONOR Magic V5 இனால் நிபுணத்துவ•தர புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ எடுத்தல் போன்றன மேற்கொள்ளப்படுவதுடன். அவை உயர்தரத்திலானவையாக அமைந்திருக்கும்.

---

# LOLC ஃபைனான்ஸ், லங்கா ரேட்டிங் ஏஜென்சியில் இருந்து A+ (நிலையான) மதிப்பீட்டிற்கு மேம்படுத்தப்பட்டது






திரு.கிரிஷான் திலகரத்ன, LOLC /பைனான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி



திரு.கொன்ராட் டயஸ், LOLC ஃபைனான்ஸ் நிறுவனத்தின் தலைவர்

NBFI துறையின் ஒரு முக்கிய பங்கு, மொத்த NBFI துறை இலாபத்தில் 36.3%, தொழில்துறை பங்குகளில் 30.3% மற்றும் துறை சொத்துக்களில் 20.6% ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இலங்கையின் மிகப்பெரிய உரிமம் பெற்ற நிதி நிறுவனமான LOLC ஃபைனான்ஸ் பிஎல்சி மற்றும் அதன் முந்தைய A (Positive Outlook) மதிப்பீட்டில் இருந்து குறிப்பிடத்தக்கபடி மேலே ஒரு நிலையான Outlook உடன் A+ தரவரிசையை வழங்கியுள்ளது. LRA இன் படி, இந்த மேம்படுத்தல் LOLC ஃபைனான்ஸின் உறுதியான சந்தைத் தலைமை, வலுவான அடிப்படைகள் மற்றும் சவாலான பொருளாதாரச் சூழ்லுக்கு இடையிலும் நிலையான வளர்ச்சியை வழங்கும் அதன் திறனை எடுத்துக்காட்டுகிறது.

LRA இன் படி, இந்த விதிவிலக்கான செயல்திறன் குறிகாட்டிகள் மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டில் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. A+ (நிலையானது) மதிப்பீட்டை ஆதரிக்கும் முக்கிய காரணிகளாக NBFI துறையில் LOLC ஃபைனான்ஸின் ஆதிக்கப் பங்கு, துறை இலாபத்தில் 36% இற்கும் அதிகமான தொகை, தொழில்துறை பங்குகளில் 30% மற்றும் துறை சொத்துக்களில் 20%, அதன் மீள்தன்மை கொண்ட மூலதனத் தளம் மற்றும் விவேகமான இடர் மேலாண்மை ஆகியவற்றை LRA குறிப்பிட்டுள்ளது.

2024/25 நிதியாண்டின் நிலவரப்படி, LOLC ஃபைனான்ஸின் நிதியாண்டின் சொத்துத் தளம் தோராயமாக LKR 430 பில்லியனாக இருந்தது. இது தொழில்துறையின் மொத்த சொத்துக்களில் சுமார் 20.5% ஆகும். நிகர வட்டி வருமானம் 24 நிதியாண்டில் இருந்து 10.8% அதிகரித்து கிட்டத்தட்ட LKR 42 பில்லியனாக உயர்ந்தது. அதே சமயம் முக்கிய பரவலானது 11.6% ஆக உயர்ந்தது.

இது வட்டி விகிதங்கள் மற்றும் பொறுப்பு மறு விலை குறைவதால் உந்தப்பட்டது. வரிக்குப் பிந்தைய இலாபம் (PAT) 16.4% அதிகரித்து LKR 25.1 பில்லியனை அடைந்தது. மொத்த வருமானத்தில் 84% முக்கிய வருமானம். LRA இன் படி, LOLC ஃபைனான்ஸ், 7.3% மொத்த NPL மற்றும் 4.97% நிகர NPL உடன் உயர் சொத்துத் தரத்தை தொடர்ந்து பராமரிக்கிறது. இது தொழில்துறை சராசரியை விட மிகக் குறைவாகவும், 24/25 நிதியாண்டில் 25.9% மூலதன போதுமான விகிதத்தை (CAR) ஒழுங்குபடுத்தும் குறைந்தபட்ச அளவை விட வசதி யாகவும் உள்ளது.

LOLC ஃபைனான்ஸ் இன் வர்த்தகநாமத்தின் கீழ் கொமர்ஷல் லீசிங் மற்றும் ஃபைனான்ஸ், LOLC டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் மற்றும் சிங்கபுத்ரா ஃபைனான்ஸ் ஆகியவற்றை ஒன்றிணைத்து, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியான மூலோபாய இணைப்புகள் மூலம் நிறுவனம் தனது சந்தை இருப்பை ஒருங்கிணைத்தது.

இந்த ஒருங்கிணைப்பு, ஒப்பிடமுடியாத அளவு, நிபுணத்துவம் மற்றும் அணுகல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தளத்தை உருவாக்கியது. செயற்பாடுகளை நெறிப்படுத்துதல், ஒருங்கிணைப்புகளைத் திறத்தல் மற்றும் இலங்கை முழுவதும் எப்போதும் வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தளத்திற்கு புதுமையான நிதி தீர்வுகளின் விரிவாக்கப்பட்ட தொகுப்பை வழங்குவதை சாத்தியமாக்கியது.

இந்த சாதனை குறித்து கருத்து தெரிவித்த பிரதம நிறைவேற்று அதிகாரி கிரிஷான் திலகரத்ன, "இது எங்கள் செயற்றிறன் மற்றும் தற்போதைய நிதி வலிமையை மட்டுமல்ல, எங்கள் தொலைநோக்கு மற்றும் எதிர்கால வணிகத் திட்டங்களையும் பிரதிபலிக்கிறது. மேலும் எங்கள் ESG கவனம் மற்றும் இடர் மேலாண்மையின் தரம் ஆகியவை எப்போதும் முக்கியமாக இருந்து வருகின்றன. LOLC ஃபைனான்ஸ் தொடர்ந்து தொழில்துறையின் முன்மாதிரியாக இருந்து வருகிறது.

மேலும் இலங்கையின் வங்கித் துறையின் டிஜிற்றல் மாற்றத்தில் மேலும் முதலீடு செய்யவும், இலங்கை மக்களிடையே நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்தவும், தொழில் முனைவோர் உணர்வை மேம்படுத்தவும், தயாரிப்பு கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும் பாடுபடுகிறது." என்று கூறினார்.

"லங்கா ரேட்டிங் ஏஜென்சியால் A+ (நிலையான) மதிப்பீட்டிற்கு உயர்த்தப்பட்டிருப்பது, LOLC ஃபைனான்ஸை வரையறுக்கும் மூலோபாய வலிமை மற்றும் வலுவான நிதி ஒழுக்கத்தின் சக்திவாய்ந்த, சுயாதீனமான உறுதிப்படுத்தலாகும்" என்று LOLC ஃபைனான்ஸ் பிஎல்சியின் தலைவர் திரு. கொன்ராட் டயஸ் கூறினார்.

"இந்த மேம்படுத்தல் எங்கள் தொழில் துறையில் முன்னணி வகிக்கும் செயற்றிறன் மற்றும் ஒருங்கிணைந்த சந்தை நிலையின் பிரதிபலிப்பு மட்டுமல்ல, எங்கள் நீண்டகால தொலைநோக்கு பார்வையின் ஒழுக்கமான செயற்படுத்தலுக்கும், இலங்கை முழுவதும் நிலையான, தொழில்நுட்பம் சார்ந்த நிதி உள்ளடக்கத்திற்கான எங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கும் ஒரு சான்றாகும். நிதித் துறையில் நிர்வாகம், புதுமை மற்றும் மீள்தன்மைக்கான அளவுகோலை தொடர்ந்து அமைப்பதற்கான எங்கள் உறுதியை இது வலுப்படுத்துகிறது."

முன்னோக்கிப் பார்க்கையில், LOLC ஃபைனான்ஸ், அதன் புதிதாக மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு அடித்தளமாக இருக்கும் வலுவான ஆளுகை மற்றும் செயற்பாட்டுத் தரங்களைப் பேணுகையில், செலவுத் திறனை மேலும் வலுப்படுத்தவும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும் மற்றும் அதன் முன்னணி சந்தை நிலையை நிலை நிறுத்தவும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரில்...

களிடமிருந்து ஏழு போதை மாத்திரைகள் மற்றும் 90 மில்லிகிராம் ஹெரோயின் என்பன மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரிடமும் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)






















## மூக்கால்...

துள்ளது. நேற்றுத் தாயார் குறித்த குழந்தைக்குப் பாலூட்டிய பின்னர் சிறிது நேரத்தில் மூக்காலும் வாயாலும் இரத்தம் வந்த நிலையில் குழந்தை மயங்கியது.

பின்னர் தெல்லிப்பழை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட வேளை குழந்தை ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,104,60)

## வல்வெட்டித்...

வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர், வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த வெடிகுண்டினை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அந்நிலையில் சந்தேகநபர்கள் மூவரும், கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற நிலையில், கடந்த 15 நாட்களுக்கு முன்னர் இந்தியாவில் தங்கி நிற்பதற்கான ஆவணங்கள், விசா என்பவை இல்லாத நிலையில் இந்தியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தினர்.

அந்நிலையில் குறித்த மூவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய வேளை மூவரையும் விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். (ம-7,33)

## வடக்கு...

கலந்துரையாடலில் வட மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பான இடர்பாடுகள் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகத் துறை சார்ந்த நிபுணர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

வட மாகாண பாடசாலைகளில் மாணவர்களின் வரவு, பாட ரீதியாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை மற்றும் முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பிரதேச ரீதியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் பிரதேச சபையினருடன் கலந்துரையாடி மாதிரி முன்பள்ளி ஒன்றினை நிபுணத்துவத்துடன் பயிற்சி வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

நகர்ப்புற பாடசாலைகளுக்கு மாணவர்கள் அதிகம் செல்வதால் கிராமப் புற பாடசாலைகள் [illegible]டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில் அவற்றைப் பாதுகாப்பதற்கு நகர்ப்புறப் பாடசாலைகளில் வகுப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதை மட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வட மாகாணக் கல்வி தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மாற்றப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் வடமாகாண ஆளுநருடன் எதிர்வரும் வாரங்களில் சந்திப்பதாகக் குறித்த காலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் சொன்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் செந்தூர்ராஜா, வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், வட மாகாண முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் உதயகுமார் மற்றும் ஜோன் குயின்ரஸ், எந்திரி சூரியசேகரம் கல்வி ஆலோசனைக் குழு உறுப்பினர் சச்சிதானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-7,104)

## போதை...

அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-7)

## கிணற்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம்தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் சடலத்தை மீட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதேபகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய குடும்பஸ்தர் என இனங்காணப்பட்டுள்ளது.


மரண விசாரணைகளை யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி; நால்வர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவின் பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் (28) ஒரே நாளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட நால்வரை விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச, தனியார்...

பிரசன்னத்துடன் கள விஜயம் ஒன்று நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் மற்றும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவகரன், உள்ளூராட்சி ஆணையாளர் சுதர்சன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், யாழ். மாநகர மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர்கள், துறைசார் அதிகாரிகள், தனியார் போக்குவரத்து சேவையின் தலைவர், அரச போக்குவரத்து சபையின் அதிகாரிகள் எனப் பெரும் உயர் அதிகாரிகள் குழுவே குறித்த கள விஜயத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த விஜயத்தின்போது நெடுந்தூர சேவை பேருந்து நிலையம், இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். மத்திய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டதுடன் குறித்த இரு பேருந்து நிலையங்களின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி, இருக்கும் சவால்கள் குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

குறிப்பாக தூர சேவை பேருந்து நிலையத்தில் இருந்து இரு பேருந்து சேவைகளையும் இணைந்த சேவை நேர அட்டவணையின் பிரகாரம் முன்னெடுப்பதில் இருக்கின்ற பிரச்சினைகள் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன் விரைவில் அதை நடைமுறைப்படுத்துவதற்காக பொறிமுறை விரைவில் உயர் மட்டக் கலந்துரையாடலின் ஊடாக எட்டப்படும் என்றும் குறித்த பேருந்து நிலையத்தின் பாதுகாப்புக் கருதி CCTV கமராக்களை பொருத்துதல் மற்றும் இருக்கின்ற மலசலகூடங்களுடன் மேலும் சில மலசலகூடங்களை கட்டமைத்தல் உள்ளிட்ட விடயங்களை ஏற்பாடு செய்யவும் பரிந்துரைக்கப்பட்டது.

இதேவேளை இ.போ.ச வின் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருக்கின்ற தூய்மையாக்கல் பிரச்சினைகள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டதுடன் அவ்வாறு தேங்கிக் கிடக்கும் குப்பைகள் பிளாஸ்ரிக் பொருட்களை உடனடியாக அகற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. (ம-7,33,104)

## கூட்டாட்சி முறைமை...

பட்டிருந்த செயலமர்வில் கலந்துகொண்ட ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கூறியதாக இலங்கைக்கான சுவிஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ற் சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை - சுவிஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிஸர்லாந்து அரசாங்கத்தின் ஏற்பாட்டில் அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான செயலமர்வொன்று கடந்த செப்ரெம்பர் மாதம் 14 - 21 ஆம் திகதி வரை சுவிஸர்லாந்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வின்போது சுவிஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிஸர்லாந்தின் கூட்டாட்சி (பெடரல்) முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன் இதனுடன் தொடர்புடைய முக்கிய கட்டமைப்புக்களுக்கான கள விஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெற்றன.

அதேவேளை இச்செயலமர்வின் ஓரங்கமாக நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துரைத்த தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் நிஹால் அபேசிங்க, 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவு மீளக்கொண்டுவரப்படும் எனவும், அதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் என அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை வாசித்து ஆராயும் பணிகள் முடிவுறும் தருவாயில் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இச்செயலமர்வு தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் இலங்கைக்கான சுவிஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ற்றின் அழைப்பின்பேரில் நேற்று புதன்கிழமை (29) கொழும்பிலுள்ள சுவிஸர்லாந்து தூதரகத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுடன் நடைபெற்ற சந்திப்பின்போது மேற்படி செயலமர்வு குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி இலங்கையில் கூட்டாட்சி முறைமையை (பெடரல்) அறிமுகப்படுத்துவது குறித்து தமிழ்க்கட்சிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக் செயலமர்வில் கலந்துகொண்ட ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கூறியதாக தூதுவர் சிறி வோல்ற் சுமந்திரனிடம் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறு தாம் ஜனாதிபதியிடம் கோரியுள்ள போதிலும், அதற்கு இன்னமும் பதில் கிட்டவில்லை எனச் சுட்டிக்காட்டினார். இருப்பினும் இதுகுறித்து சுவிஸர்லாந்தில் நடாத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1948 - 04 - 26 | 2025 - 10 - 28 |

### மார்க்கண்டு இராஜேஸ்வரி

சிவன் புது வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இராஜேஸ்வரி அவர்கள் கடந்த 28.10.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டினர் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதி - சீதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் மார்க்கண்டு(ஓய்வு பெற்ற இ.போ.ச சாரதி) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சின்னராசாவின் அன்புச் சகோதரியும் மணிமேகலையின் அன்பு மைத்துனியும் ஸ்ரீகாந்(அபிவிருத்தி உத்தியோகத்தர் - கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் -வவுனியா), ஸ்ரீகாந்தரூபன்(சாரதி - இ.போ.ச - கோண்டாவில்), பாரதி(லண்டன்), தேவகி(கிராம அலுவலர் பிரதேச செயலகம் - நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவாஜினி(ஆசிரியர் - வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்), சுசிதா(குடும்ப நல உத்தியோகத்தர் - கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), மதீஸ்வரன் (லண்டன்), சர்வராஜா(பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் - வவுனியா பிராந்தியம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் துவாரகன், ஆருகன், நித்விகன், ஸாம்பவி, கனிமொழி, மதுமிகன், அதிஸ்மிகன், அட்சயன், லோகிதன், தீபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2025) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

349/44, சிவன்புது வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 370 8896 (5770)
தகவல்: குடும்பத்தினர்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4216)
076 825 7716 (ஆகாஸ்)

சிறுநீரகம் தேவை
"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு "O" குருதி வகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
ஆண், பெண் இருபாலாரும் வழங்கலாம்.
HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும்.
076 540 6732 (Whatsapp/ Call)
077 656 0222 (5769)

GTV CONSULTANTS PRIVATE LIMITED
GTV சிறந்த சேவை ஊடாக
◆Canada ◆German
◆Australia ◆Newzeland
◆France
போன்ற நாடுகளுக்கு Work visa, visit visa ஊடாக எம்மால் பெற்றுத் தரமுடியும் என்பதுடன் குறுகிய காலத்தில், குறைவான கட்டணத்தில் நம்பிக்கைக்குரிய பயணமாக நீங்கள் பயணம் செய்ய எம்மை நாடுங்கள்.
GTV Consultant Pvt Ltd
Kacheri Nallur Road, Jaffna.
075 442 5718 (5769)

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4215)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4215)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வேலையாட்கள் தேவை
சாவகச்சேரியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை, றொட்டி வேலை, சப்பிளே போன்ற வேலைகளில் அனுபவம் உள்ள பணியாளர்கள் தேவை.
T.P: 077 649 1027 (5773)

யாழ்ப்பாணத்தில் Voyzant விசாக்கள்
இந்தியா, அமெரிக்கா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, ஹொலன்ட், டென்மார்க், பெல்ஜியம், மலேசியா, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிற்கு விசா சேவைகள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
+94763458646, 021 222 6866 (5725)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org